நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 263 /2019**

**P.W. 8 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தங்கராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாதையன் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 8** |
| வயது | : | 30 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 30–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.47PM

1. நான் தற்போது மேட்டூர் பொன்னகரில் குடியிருக்கிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருக்கு அடிப்பட்டுது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்வில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. 27.04.2019ம் தேதி காலை 10.00 மணி அளவில் நான் மேட்டுர் பேருந்து நிலையம் அருகே வந்தபோது ஆஜர் எதிரி அரசு பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநரை தடுத்தி நிறுத்தி கெட்ட வார்த்தையால் திட்டி இருவைரயும், கைகளால் ஓங்கி அடித்தாகவும், அதை கேட்காத எதிரி செந்தில்குமாரை கீழே தள்ளி அருகில் இருந்து ஓட்டல் கடைக்கு சென்று அங்கு இருந்த விறகு கட்டையை எடுத்து வந்து செந்தில்குமாரின் இடுப்பில் அடித்தாகவும், அடிக்க வேண்டாம் என்று சொன்ன செல்வராஜையும், அதே கட்டையால் அடித்தாகவும், போலீஸை தரக்குறைவாக பேசியதாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.53PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**